முறையில், விதையின் சத்துப்பொருள் கெடாத முறையில் பாதுகாக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. உரிய விளைச்சலைத் தரத்தக்க அளவில் விதைகளைப் பாதுகாத்து வைக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

சிறப்பு அங்காடிகள்

* 283 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவையில் சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) கோவையில் "சிந்தாமணி" என்ற பெயரில் "கூட்டுறவு சிறப்பு அங்காடி" ஒன்று இயங்கி வருகிறது.

(இ) அதில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர்.

* 284 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் சிறப்பு அங்காடி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சூப்பர் மார்க்கெட்டில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆறு பேர்கள் என்னென்ன வேலைகளில் இருக்கிறார்கள்? கிளெரிகல் செக்ஷனிலா அல்லது சுத்தப்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, என்னென்ன வேலைகளில் அவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் இப்போது என் கைவசம் இல்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இராமநாதபுரம் மாவட்டத்திலே சூப்பர் மார்க்கெட்டே இல்லை. அங்கே சிவகாசி, விருதுநகர், ராஜபாளையம் இந்த நகரங்களின் ஜனத்தொகையைக் கணக்கில் கொண்டு சூப்பர் மார்க்கெட் ஒன்றை ஆரம்பிக்க ஏதாவது செயல்திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு அங்காடி மத்திய அரசின் உதவியில் நடைபெறுகிறது. மத்திய அரசு ஒரு திட்டத்தின் அடிப்படையில் சிறப்பு அங்காடிகளுக்கு நிதி உதவுகிறது. எந்த நகரங்களில் ஒன்றரை